புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியத்தில் கூத்துக்கலை

முனைவர் ப.ம.மயிலா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான்கடை

ஆய்வுச் சுருக்கம்

பன்னெடுங்காலமாக வாழ்ந்து வந்த மனிதனுக்குப் பொழுது போக்கிற்காகவும், விளையாட்டிற்காகவும், தன் அறிவு சார்ந்த காரணங்களிலும் தன்னை கலையின் மீது ஈடுபடுத்திக் கொண்டிருக்க வேண்டும். காலையில் எழுந்து வயலுக்குச் சென்று வேலை செய்து மாலை வீடு திரும்பும் உழவனுக்கு உடல் அசதியோடு மனச்சுமையும் கூடியிருக்க வேண்டும். அவன் சந்தோசத்தில் இருக்க வேண்டிப் பாடலைப் பாடியும், கைகளைத் தட்டியும் இசையை எழுப்பி இருக்க வேண்டும். அல்லது பொருட்களைத் தட்டியோ உரசியோ ஒலி எழுப்பி இருக்க வேண்டும். அதனோடு நடனம் ஆடித் தான் மட்டும் சந்தோசம் அடையாமல் தன்னைப் போன்ற பிற மக்களையும் மகிழ்ச்சி அடைய வைத்திருக்க வேண்டும். இசையோடு கூடிய நடிப்புக்கலையே கூத்துக்கலையாகும். மக்களை இன்புறச் செய்யும் நிகழ்ச்சி கூத்து ஆகும். இக்கலையில் மக்கள், மன்னர்கள், புலவர்கள் என்று அனைவரும் பங்கு பெற்றனர். இவ்வகை கூத்துகலைப் பற்றி இக்கட்டுரையின்கண் ஆராயப்படுகிறது.

திறவுச் சொற்கள்

துணங்கைக் கூத்து, பிற துணங்கைக் கூத்துக்கள் இவை திறவுச் சொற்களாக அமையப்பெற்றுள்ளன.

## முன்னுரை

கணித்துக் கூற முடியாத காலத்தை குறிப்பிடுவது தொன்மம் எனும் சொல். தொன்மையான இவ்வுலகிலகில் முதல் மனிதன் தோன்றி 30,000 ஆண்டுகளுக்கு மேலாகின்றன என்பது அறிஞர்கள் கருத்து. அந்த ஆதிமனிதன் பரிணாம வளர்ச்சியில் நிரந்தரக் குடியிருப்பினை ஏற்படுத்தி பயிலிடவும், விலங்குகளை மேய்க்கவும் தொடங்கினான். இதற்கு அடுத்தக் கட்டத்திலே அவன் மொழிகளைக் கண்டுபிடித்தான். இம்மொழியைக் கண்டடைவதற்கு முன்பு மனிதன் தன் தகவலை, மகிழ்ச்சியை, துக்கங்களை என அவன் உணர்ச்சிகளை உடலசைவுகள் வழியாகவோ, கைகள் வழியாகவோ வெளிப்படுத்தியிருக்க வாய்ப்புள்ளது.

“பேசும்மொழி இல்லாத ஆரம்ப காலத்தில் ஆதிமனிதனின் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக நடனம் இருந்தது” (சரளா.மா, தமிழ் இலக்கியத்தில் நாட்டிய வரலாறு, ப.1) என்னும் மேற்கோள், மொழிக்கு முன்பே நடனம் தோன்றியது என்பதை உணர்த்துகிறது.

“கூத்து” என்ற சொல் நம் தமிழ் இலக்கிய மரபில் நடனத்துடன் தொடர்புடையது. இங்கே நடனக்கலையின் கடவுளான நடராஜப் பெருமானுக்கே “ கூத்தாட்டு பெருமான், கூத்தன் (The Dancer) என்றும் பெயர் உண்டு. மனிதனின் மனம் அடையும் மகிழ்ச்சியின் உச்சக்கட்ட வெளிப்பாடு கூத்தே. இந்தக் கூத்து மனித சமூகத்தின், வாழ்வின் ஒரு கூறாக மாறிய நிலையில் கூத்தை உருவாக்கும் அல்லது நிகழ்த்தும் கலைஞர்கள் உருவாகினர். ஒவ்வொரு திணை சார்ந்த கலைகளுக்கு உரியவர்களை,

*‘கூத்தன், பாணர், பொருநர், விறலி’ என்று தொல்காப்பியம் குறிப்பிடும். இதில் கூத்தை நிகழ்த்துபவர் கூத்தர். இக்கூத்தர்களால் கூத்து நிகழ்த்தப்பட்டாலும், தொல்காப்பியம் பொருள் அடிப்படையில் நான்கு வகைகளாக கூத்துக்களைப் பகுத்துள்ளது.*

- ❖ *போர் சார்ந்தவை*
- ❖ *அகம் சார்ந்தவை*
- ❖ *தெய்வ வழிபாடு சார்ந்தவை*
- ❖ *பொதுநிலை சார்ந்தவை*

*இந்த நான்கினுள் நம் ஆய்வுக்கு எடுத்திருக்கும் துணங்கைக் கூத்து முதல் பகுப்பினுள் அமைந்திருக்கிறது.*

*துணங்கைக் கூத்து*

*“முடக்கிய இருகை பழுப்புடை யொற்றியாடல் ‘துணங்கை’ என்று அபிதான சிந்தாமணிக் குறிப்பிடும் துணங்கைக் கூத்து பண்டைத் தமிழகத்தில் மகளிர் ஆடிய ஒரு ஆடல் வடிவம் ஆகும்.*

*“துண் + அம் + கை = துணங்கை*

*துணைக்கைக் கொடுத்து கூடி ஆடும் கூத்தாதலால் ‘துணங்கை’ எனப் பெயர் பெற்றது என்பார்” (தமிழிசைக் கலைக்களஞ்சியம், மூ.தொ.ப.115)*

*“துண் + ஐ = துணை*

*ஆடவன் துணைக் கையை மங்கைக்கு கொடுத்தல் என்பது தலைக்கைக் கொடுத்தல் ஆகும். தலைமைக்கை - தலைக்கை. கொடுத்தல் என்பது ஒரு சிறந்த கொள்கையை உடைய செயல் என்பார் நச்சினார்க்கிளியர் (மேலது, ப.113).*

*பழங்காலத்தில் இவ்வகை நடனம் முக்கிய நிகழ்வுகளில் அல்லது வெற்றி கொண்டாட்டங்களில் மிகவும் விரும்பி ஆடும் ஆட்டமாக இருந்துள்ளது. இதற்கு சான்றாக 3000 ஆண்டு பழமையான பாறை ஓவியம் கிருஷ்ணகிரி மலைக்கோட்டையில் உள்ளது.*

*பெண்கள் பலர் கூடிக் கை கோர்த்து ஆடும் கூத்து இது. இசையோடு கூடி அதற்கு அமைவாகவே இவ்வாடல் இடம்பெற்றது என்பதை பழந்தமிழ் நூல் சான்றுகள் காட்டுகின்றன. இறைவழிபாட்டு தொடர்புடையதாக இதனை ஆடியிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. எனினும் போர்க்களத்திலும் இக்கூத்து ஆடல்பெற்ற சான்றுகளும் நமக்கு கிடைக்கின்றன.*

*தொல்காப்பியம் குறிப்பிடும் காஞ்சியத்துறைகளுள் ஒன்றான “பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்” (தொல்.பொருள். புறத். நூ.19:6) என்றும் நூற்பாவை இத்துணங்கைக் கூத்தோடு தொடர்புப்படுத்தி நாம் காணலாம். சங்க இலக்கியத்தில் போர்க்களத்தில் வீரர்கள் ஆடுதல், வெற்றி பெற்ற அரசன் ஆடுதல், பேய்கள் ஆடுதல் போன்ற பல நிலைகளில் துணங்கைக் கூத்து இடம்பெறுவதைக் காண முடிகின்றது.*

*பதிற்றுப்பத்து, சேரமான் செங்குட்டுவன் தன் போர்வீரர்களுடன் இணைந்து துணங்கைக் கூத்து நிகழ்த்தியுள்ளதை பதிவுச் செய்துள்ளது.*

*“துணங்கை ஆடிய வலம்படு கோமான்” (பதி. 57:4)*

*என்றும், போர்க்களத்தில் தோளை உயர்த்திக் கைவீசி ஆடிய கூத்து என்பதை,*

*“கொன்றுதோள் ஓச்சிய வென்றிடு துணங்கை” (பதி.77:4) என்றும் அடி குறிப்பிடுகின்றது. வெற்றி பெற்றதன் மூலம் ஆடிய துணங்கைக் கூத்து என்பதை “வென்று ஆடு துணங்கை” என்றும் வரி உறுதிச் செய்கின்றது.*

*போர்க்களத்தில் பேய்கள் ஆடும் துணங்கைக் கூத்திற்கும் பல பதிவுகள் கிடைக்கின்றன.*

*“கணம்கொள் சுற்றமொடு கை புணர்ந்து ஆடும்”*

*என்று பேய்மகள் துணங்கை ஆடுவதையும்,*

*“துணங்கை அம் பூதம் துகில் உருத்தவை போல்” (பெரு.232:5)*

*என்று பேய்மகள் துணங்கை ஆடுவதையும்,*

*“வெண்திரைப் பரப்பின் கடுந்துர்க் கொன்ற*
*பைம்பூண் சேஎய் பயந்த மா மோட்டுத்*
*துணங்கை அம செல்வி அணங்கு நொடித்தாங்கு” (பெரு.457:9)*

*என்று பிணம் தின்னும் பேய்கள் தோளை உயர்த்தி மகிழ்ச்சியில் ஆடிய செய்திகள் பல பதிவாகியுள்ளன.*

*கலிங்கத்துப் பரணியில் நிறையப் பிணங்கள் கிடைத்த மகிழ்ச்சியில் பேய்கள் இருகைகளையும் தூக்கி ஆடிய செய்தி விவரிக்கப்பட்டுள்ளது.*

*"இருகையும் வென்றதோர் வென்றிபாடி*
*இருகையும் வீசிறின்(று) ஆடினவே" (கலி.பர.587)*

*எனப் பேய்கள் போர்க்களத்தில் துணங்கைக் கூத்தாடியச் செய்தி பல பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*பிற துணங்கைக் கூத்துக்கள்*

*சங்க இலக்கியங்களில் பரத்தையர் மிக அதிகமாக ஆடுகின்றக் கூத்தாக துணங்கைக் கூத்து காணப்படுகின்றது.*

*போர் வீரர்கள் கூடியுள்ள சேரிக்கனில் நடைபெறும் விழாக்களிலும், பொது மன்றங்களிலும் ஒருவரைபொருவர் தழுவிக் கொண்டு பரத்தையர் துணங்கை ஆடியுள்ளனர். இதனை,*

*"மன்னர் குழீகிய விழவினானும்*
*மகளிர் தழீகிய துணங்கையானும்" (குறு.31: 1-2)*

*என்றும், தலைவன் காண மத்தள முழக்கத்திற்கு அவர்கள் ஆடியச் செய்தியை,*

*"முடிவு இழில் துணங்கை விழவின்" (அகம்.336-16)*

*என்பதன் மூலம் அறியமுடிகிறது. மேலும் தலைவன் பரத்தைக்கு தலைக்கைக் கொடுத்து அவளோடு ஆடி மகிழ்ந்ததை,*

*"நீ தளரிய பெயரோடு*
*துணங்கையாய்" என வந்த கல்வையின் கடப்பு அன்றோ"*
*(கலி.70 :13-14)*

*"நினக்கு ஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து நின்*
*தமர் பாடும் துணங்கையுள் அரவம் வந்து எடுப்புமே" (கலி.70 :13-14)*
*"நிரைகொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ள*
*கரையிடைக் கிழிந்த நின் கழகம் வந்து உரையாக்கால்"*

*போன்ற கலித்தொகைப் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.*

*மேலும் இச்செய்தியினை பதிற்றுப்பத்து 52 :14-16 வரிகளும், நற்றிணை 50 :2-3 வரிகளும் உறுதிப்படுத்துகின்றன.*

*இவற்றிலிருந்து பரத்தையரால், ஆடவரைக் கவருவதற்காக ஆடப்பட்ட கூத்தே துணைங்கைக் கூத்து என்றும் கொள்ளலாம்.*

*நிறைவாக*

*துணங்கைக் கூத்து பெண்களாலும், பரத்தையராலும், அரசனாலும், போர் வீரர்களாலும் போர்க்களத்தில் பேய்களாலும் ஆடப்பட்ட ஒன்றாக இருந்திருக்கிறது. இக்கூத்தை நிகழ்த்த குறிப்பிட்ட நாள் இருத்ததையும் அறியமுடிகின்றது. இருப்பினும் தெய்வ வழிபாட்டோடு தொடர்புடையதாக துணங்கைக் கூத்தைப் பற்றியச் செய்திகள் பதிவாகவில்லை.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********